(ஆ) தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன் வடிவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன்வடிவை அறிமுக்கப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

1971–72-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகளின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

(5) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—தொடர்ச்சி.

(உ) கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—தொடர்ச்சி.

(ஊ) கோரிக்கை எண் 45—ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்—தொடர்ச்சி.

(எ) கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்—தொடர்ச்சி.

(ஏ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.—தொடர்ச்சி.

(ஐ) கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்.—தொடர்ச்சி.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, நடைபெற்று கொண்டிருக்கின்ற வருவாய்த்துறை மானியத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தமிழக அரசின் வருவாய்த்துறை கழக அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பின்னல் ஆற்றியிருக்கின்ற பணிகளை மூன்று சிறப்பான காரணங்களால் நாம் பாராட்டியே தீரவேண்டும். இந்த அரசு உருவானத்திற்குப் பின்னல்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்